## கழக மறுசீரமைப்பு

# தலைமைக் கழகப் பிரதிநிதிகள்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**சென்னை, செப். 04 –**

**கழக மறுசீரமைப்பு பிரதிநிதிகள் குறித்து (31.08.2026) அன்று தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:**

கழக தலைமைச் செயற்குழு கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின்படி, கழகத் தலைவர் அவர்கள் 110 கழக மாவட்டங்களை அறிவித்துள்ளார்.

கழக சீரமைப்புக்குழு வகுத்துத் தந்த வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி பகுதி - நகரம் - ஒன்றியம் - பேரூர் - வட்ட - கிளைக் கழகங்களை மறுசீரமைத்து, தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் பணியை நேரடியாக மேற்பார்வையிடுவதற்காக ஒரு வருவாய் மாவட்டத்திற்கு இருவர் வீதம் 76 தலைமைக் கழகப் பிரதிநிதிகள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் நடத்தும் மாவட்டச் செயற்குழு கூட்டங்கள் அனைத்தும் தலைமைக் கழகப் பிரதிநிதிகள் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும். பகுதி - நகரம் - ஒன்றியம் - பேரூர் - வட்ட - கிளைக் கழகங்கள் மறுசீரமைப்பில் ஏதேனும் கருத்துகள், மாறுபாடுகள் இருப்பின் கழகத்தினர் தமது மாவட்டத்திற்குரிய தலைமைக் கழகப் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கலாம்.

மாவட்டச் செயற்குழுக் கூட்டம் சட்டப்பேரவை நடைபெறாத நாட்களில் நடத்தும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ. எண் | மாவட்டம் | தலைமைக் கழக பிரதிநிதிகள் |
|---|---|---|
| 1 | திருவள்ளூர் | திரு. அன்னியூர் சிவா<br>திரு. ப. அப்துல் மாலிக் |
| 2 | சென்னை | திரு. பேரா. ஜெ. காண்ஸ்டண்டைன் ரவீந்திரன் எம்.பி.<br>திரு. ஆஸ்டின் எம்.எல்.ஏ |
| 3 | செங்கல்பட்டு | திரு. அண்ணாதுரை எம்.பி<br>திரு. கோவி.லெனின் |
| 4 | காஞ்சிபுரம் | திரு. என். மருது கணேஷ்<br>திருமதி. கே. ராணி ரவிச்சந்திரன் |
| 5 | ராணிப்பேட்டை | திரு. டி.செங்குட்டுவன்<br>வழக்கறிஞர் திரு. அ. சரவணன் |
| 6 | வேலூர் | திரு. இ.கருணாநிதி<br>திரு. ப. தாயகம் கவி |
| 7 | திருப்பத்தூர் | திரு. வே. கௌதமன்<br>வி.மு.விஜய கதிரவன் |
| 8 | திருவண்ணாமலை | திரு. சி.வி.எம்.பி.எழிலரசன்<br>டாக்டர் பி.எம். யாழினி |
| 9 | விழுப்புரம் | புதுச்சேரி திரு. சிவா<br>திருமதி. ஜெ.வீரமணி |
| 10 | கள்ளக்குறிச்சி | திரு .ஆர். டி.அரசு<br>திரு. கே.பி.சங்கர் |
| 11 | கிருஷ்ணகிரி | திரு. ஆ.கிருஷ்ணசாமி<br>திருமதி.நாமக்கல் ப. ராணி |
| 12 | தருமபுரி | திரு. பார் இளங்கோவன்<br>திரு. ஜெயராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., |
| 13 | சேலம் | திரு. இரா. கிரிராஜன்<br>திரு. அழகிரி சதாசிவம் |
| 14 | நாமக்கல் | டாக்டர் ஆர். கோகுல்கிருபாசங்கர்<br>திரு. திருப்பத்தூர் நல்லதம்பி |
| 15 | ஈரோடு | திரு. சபாபதி மோகன்<br>திரு. உடுமலை ஜெயகுமார் எம்.எல்.ஏ., |
| 16 | திருப்பூர் | திரு. வி.சி.சந்திரகுமார்<br>திரு. இசை |
| 17 | நீலகிரி | திரு. கே.ஈ.பிரகாஷ்<br>வழக்கறிஞர் திரு. இரா. ராஜீவ்காந்தி |
| 18 | கோயமுத்தூர் | திரு. எஸ்.ஆர்.பார்த்திபன்<br>திருமதி. ஜெ. ரேகா பிரியதர்ஷினி |
| 19 | கரூர் | திரு. தி.அ. முகம்மது சகி<br>திரு. பெரம்பலூர் பிரபாகரன் |
| 20 | திருச்சிராப்பள்ளி | திரு. வ.வேலுசாமி<br>திரு. வேடசந்தூர் சாமிநாதன் எம்.எல்.ஏ., |
| 21 | பெரம்பலூர் | திருமதி. அஞ்சுகம் பூபதி<br>திரு. முத்துவேல் ராமசாமி |
| 22 | அரியலூர் | திரு. சபா ராஜேந்திரன்<br>திரு. அம்பேத்குமார் எம்.எல்.ஏ., |
| 23 | கடலூர் | திரு. கலாநிதி வீராசாமி எம்.பி.,<br>திரு. பரிதி இளம்சுருதி |
| 24 | மயிலாடுதுறை | திரு. கோவி.செழியன்<br>திரு. துரை கி சரவணன் |
| 25 | நாகப்பட்டினம் | திரு. பி.எஸ்.சீனிவாசன் எம்.எல்.ஏ.,<br>திரு. இளமகிழன் |
| 26 | தஞ்சாவூர் | திரு. ஜி.பி.ராஜா<br>திருமதி. மாலதி நாராயணசாமி |
| 27 | திருவாரூர் | திரு. இள.புகழேந்தி<br>திரு. தமிழன் பிரசன்னா |
| 28 | புதுக்கோட்டை | திரு. ஏ.கே.எஸ்.விஜயன்<br>திரு. மதுரை பாலா |
| 29 | திண்டுக்கல் | திரு. செல்வம் எம்.பி<br>திரு. பிரபு கஜேந்திரன் |
| 30 | சிவகங்கை | திரு. இளையராஜா (இளைஞரணி)<br>திரு. தங்கபாண்டியன் (ராஜபாளையம்) |
| 31 | மதுரை | பி.டி.சி. செல்வராஜ்<br>வழக்கறிஞர் திரு. ரவீந்திரன் |
| 32 | தேனி | திரு. சுபா சந்திரசேகர்<br>திரு. கவிஞர் காசி முத்துமாணிக்கம் |
| 33 | விருதுநகர் | டாக்டர் கலை கதிரவன் எம்.எல்.ஏ.<br>திரு. இன்பா ரகு |
| 34 | இராமநாதபுரம் | திருமதி. ஹெலன் டேவிட்சன்<br>திரு. ஜெகன் பெரியசாமி |
| 35 | தூத்துக்குடி | திரு. நல்ல சேதுபதி<br>திரு. தமிழ் கா.அமுதரசன் |
| 36 | திருநெல்வேலி | திரு. முத்துராஜா எம்.எல்.ஏ.,<br>திரு. ஜோயல் |
| 37 | தென்காசி | திரு. ஞானதிரவியம்<br>திரு. வ.து.ந.ஆனந்த் |
| 38 | கன்னியாகுமரி | திரு. மார்கண்டேயன் எம்.எல்.ஏ.,<br>திரு. என். மாலைராஜா |

இவ்வாறு தலைமைக்கழகம் அறிவித்துள்ளது.

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கன்னியாகுமரி மேற்கு மாவட்டம், மேல்புறம் தெற்கு ஒன்றியம், துருத்தியாரவிளையைச் சேர்ந்த ஏ.அருள்சங்கர், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் :02.09.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் சார்பாக வ.உ.சி. பிறந்தநாள் விழா!

### மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, செப். 4 - திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், சுதந்திர போராட்ட வீரர் கப்பலோட்டிய தமிழன் ஐயா வ.உ.சி. அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாளை (5.9.2026 - சனிக்கிழமை) காலை 8.30 மணிக்கு திருச்சி கோர்ட் அருகில் உள்ள வ.உ.சி. அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்த உள்ளோம்.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், தொண்டர்கள் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டு கொள்கின்றோம்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.



## ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி, இ.வேலாயுதம் (எ) இ.வி.கதிரவன் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் :02.09.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.